# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.No. 92 of 1996 in O.S.No. 81 of 1996 | **CNR No.** | : | TNKI13-000001-1972 |
| **Name** | : | ராம கவுண்டர் | **Father's Name** | : | மாரப்ப கவுண்டர் |
| **Witness for** | : | மனுதாரர் | **Calling** | : | PW1 |
| **Age** | : | 70 | **Village** | : | ராமகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 04:05 PM | **End Time** | : | 04:25 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**9 –ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

(1) சாமாத்தம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். சாமாத்தம்மாள் எனக்கு எதிராக தான் பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் ¼ பங்கு என எனது அம்மாவிற்கு என்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. எனது அம்மா இறக்கும் பொழுது கண்ணுகவுண்டர் மற்றும் சக்திவேல் உடன் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

(2) 03.03.1987 தேதியிட்ட எனது உயிலுக்கு பிறகு சக்திவேல் பெயரில் 25.03.1987 தேதியிட்ட உயில் இருப்பது எனக்கு தெரியும் என்றால் அப்போது தெரியாது, 7–8 வருடங்களுக்கு பிறகு தான் தெரியும். எனது உயிலுக்கு பின்னிட்டு சக்திவேல் பெயரில் உயில் எழுதி

கொடுத்திருப்பதால் அது தான் இறுதியான உயில் என்றால் சரியல்ல, அது போலியான உயில் ஆகும். நான் சொல்வது பொய் என்றும் எனது அம்மா இறக்கும் வரை சக்திவேல் உடன் தான் இருந்தார் என்றும் நான் தான் போலியாக உயில் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை, கண்ணுகவுண்டர் தான் மேல்முறையீடு செய்தார். நான் தாக்கல் செய்துள்ள உயில் பத்திரத்தில் **அசல் வழக்கு எண். 44/1977** க்கு உட்பட்டுள்ள வழக்கு சொத்து என்று குறிப்பிடவில்லை என்றும் **அசல் வழக்கு எண்.141/1978** என்ற தான் குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

(3) நான் தாக்கல் செய்துள்ள உயிலை எனது அம்மா சாமாத்தம்மாள் எழுதவில்லை என்றும் நானும் சாட்சிகளும் நாங்களாகவே தயாரித்து மை வைத்துள்ளோம் என்றால் சரியல்ல, எனது அம்மா உயில் எழுதுவதை நான் பார்க்கவில்லை, எனது மச்சான் தான் சொன்னார். எனது 04.03.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் எனது அம்மா சொல்ல சொல்ல பாய் ஒருவர் எழுதினார் என்று அதை நான் பார்த்ததாக நான் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது பார்க்கவில்லை என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது சாட்சியத்தில் முன்பு பார்த்தாகவும் உடன் இருந்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது பார்க்கவில்லை என்றும் உடன் இல்லை என்றும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானாக உயில் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(4) **<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/xxx

District Munsif
Uthangarai